Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



# பதிவு அஞ்சல் ஒப்புகை அட்டையுடன்

அனுப்புநர்
திரு.க.முக்கையா, பி.இ.,எம்டெக்.,
உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
எண்.9, முதல் தளம்,
இலட்சுமிபுரம் வடக்கு தெரு,
கரூர் நகரம்,
கரூர் மாவட்டம்-639 001.
E Mail id : ad.karur.dist@gmail.com
Ph.No: 04324-260 625

பெறுநர்
தலைவர்,
நெடுங்கூர் ஊராட்சி / கிராமம்
க.பரமத்தி ஊராட்சி ஒன்றியம்
கரூர் மாவட்டம்

ந.க.எண்.682/2021/கமா.

நாள்.08.03.2022.

ஐயா,

பொருள் : மனைப்பிரிவு - மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - கரூர் மாவட்டம்-புகளூர் வட்டம் - க.பரமத்தி ஊராட்சி ஒன்றியம் - நெடுங்கூர் ஊராட்சி / கிராமம் - சர்வே எண்-100/B1-யில் 3.93 ஏக்கர் (1.59.00 ஹெக்டேர்) பரப்பளவுள்ள இடத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வழங்குதல் – குறித்து.

பார்வை:

1) மனுதாரர் திரு.அகமதுமைதின் மற்றும் தங்கராஜ் அவர்களின் இணையதள விண்ணப்ப பதிவு எண்,202102501010018, நாள்.02.01.2021. இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட நாள்-11.03.2021, 22.11.2021 மற்றும் 11.01.2022
2) இவ்வலுவலக கடிதம் இதே எண். நாள்-11.03.2021, 03.12.2021 மற்றும் 05.01.2022.
3) நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்-19799/2020/போ, நாள்-24.12.2020 மற்றும் 08.02.2021.
4) மனுதாரர் திரு.அகமதுமைதின் மற்றும் தங்கராஜ், கரூர் மாவட்டம் அவர்களின் கடிதம் மூலம் தானப்பத்திரம் பெறப்பட்ட நாள்-24.12.2021 மற்றும் 25.02.2022.
5) அரசாணை எண்-138, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள்-04.06.2004.
6) அரசாணை எண்-79, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள்-04.05.2017.
7) அரசாணை எண்-18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி-(1)துறை, நாள்-04.02.2019 மற்றும் அரசாணை எண்-16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி-(1)துறை, நாள்-31.01.2020.
8) அரசாணை எண்-141, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்(UD4(3)துறை, நாள்-23.09.2020.
9) அரசாணை எண்-181, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்(UD4(1)துறை, நாள்-09.12.2020.
10) அரசு கடிதம் எண்-19113/நவ4(3)/2017-1, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள்-30.12.2020.
11) நகர் ஊரமைப்பு ஆணையாளர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்-13686/2017/LA1, நாள்-08.09.2017.
12) வேளாண்மைத்துறை இணை இயக்குநர், கரூர் மாவட்டம் அவர்களின் கடிதம் எண்- இ1/2231/2021, நாள்-30.03.2021.
13) நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.320/2020/TCP3, நாள்.07.01.2022.

பார்வை 1-ல் கண்ட மனுதாரர் கடிதங்களுடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு இசைவுக்கான கோரிக்கை, பரிசீலிக்கப்பட்டு, பார்வை(2)-ல் கண்ட இவ்வலுவலக கடிதம் நாள் 03.12.2021 மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் இசைவு வழங்கப்பட்டது. பார்வை(4)-ல் கண்ட கடிதம் மூலம் சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகளை உள்ளாட்சியிடம் தானமாக தானபத்திர எண்-2507/2021, நாள்- 25.12.2021-ல் மற்றும் பிழை திருத்தல் பத்திர எண். 520/2022, நாள்.25.02.2022 ஒப்படைக்கப்பட்டு பெறப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

1) மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு **ம.வ/மா.ந.ஊ.அ(க.மா) எண்-30/2022** என எண்ணிடப்பட்டு 2 அசல் வரைபடங்கள் மற்றும் அசல் தானபத்திரம் மேல்நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பி வைக்கப்படுகிறது.
2) மேலும், உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும் போது மனைப்பிரிவு நிபந்தனை எண்-9(ஈ) -ன்படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.
3) உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகத்திற்கும், நில அளவைத் துறைக்கும், தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.
4) செயலாணைக் கடிதம், மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகைச் சான்றினை உடன் அனுப்பி வைக்குமாறும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**சிறப்பு நிபந்தனைகள்**

1) (a) பார்வை(9)-ல் கண்ட அரசாணை மற்றும் பார்வை(7)-ல் TNCDBR -2019-ல் விதி எண்-47 (11)-ன்படி மாநகராட்சி / நகராட்சி பகுதி எனில் " Collecting the necessary fees including the charged for providing amenities like roads, storm water drains and street lights from the applicants" . After collecting the necessary fees the final layout sketch, permit of planning authority along with approval of Local Body shall be issed to the applicant(s) directly.

(b) மாநகராட்சி / நகராட்சி அல்லாத பகுதிகளில் " Shall collect the necessary fees and issue the final layout sketch. permit of planning authority along with the permit of local body to the applicants directly, only after ensuring that the applicant lays tar roads, provide other amenitites like storm water drains, water supply facilities by constructing required OHT, provide necessary street lights etc., as per the standards specified by the Local Body".

2) (EWS) பொருளாதாரத்தால் பின் தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது. ஆனால் கிராமப்புற பகுதிகளில் மனை ஒப்புதல் வழங்கப்பட்ட 3 வருடங்களுக்கு மேலாகியும் EWS மனைகள் விற்க இயலாத நிலை இருப்பின் அரசாணை எண்-16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்-31.01.2020-ன்படி EWS மனைகளை ஒருங்கிணைப்பு செய்ய விண்ணப்பித்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.
3) பார்வை 10 மற்றும் 11-ல் கண்ட அரசு கடிதம் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில் சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

## அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விபரம்

| விவரம் | | பரப்பளவு | விழுக்காடு |
|---|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | - | 1.59.00 ஹெக்டேர் (3.93 ஏக்கர்) மற்றும் 171191 ச.அடி | - |
| ஒதுக்கிய மனைகள் | | 74 (EWS மனைகள் உட்பட) | - |
| <u>பொது ஒதுக்கீடு</u><br>மனுதாரர் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டது. | - | | |
| 1. உத்தேச சாலைகள் மற்றும் மூலை முடக்குகள் | - | 58072.32ச.அடி அல்லது 5395.05ச.மீ | - |
| 2. உள்ளாட்சிக்கான ஒதுக்கீடு (பொது ஒதுக்கீடு) | - | 575ச.அடி அல்லது 53.42ச.மீ | 0.51% |
| 3. தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கானது | - | 572ச.அடி அல்லது 53.14ச.மீ | 0.51% |
| 4. 10% OSR ஒதுக்கீடு<br>பூங்கா 1 = 5061.08ச.அடி<br>பூங்கா 2 = 6685.57ச.அடி<br>---<br>11746.65 ச.அடி<br>---<br>ஒப்படைக்கப்பட்டுள்ளது. | | 11746.65 ச.அடி அல்லது 1091.30 ச.மீ | 10.38% |
| <u>விற்பனைக்குரியவை</u><br>EWS மனைகளின் பரப்பு<br>மனை எண்கள் 1 முதல் 12 வரை 63 மற்றும் 67 முதல் 74 வரை. | - | 1224.32 சமீ அல்லது 13178.53ச.அடி | 11.65% |

உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
கரூர் மாவட்டம்.

08/03/22

# கரூர் மாவட்டம், க.பரமத்தி ஊராட்சி ஒன்றியம், நெடுங்கூர் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை திருமதி. N.ஜெகதாம்பாள்

ந.க.எண் ஆ1/002/2022–2023 நாள்: 29.04.2022

பொருள்: மனைப்பிரிவு அனுமதி – கரூர் மாவட்டம் – புகளூர் வட்டம் – க.பரமத்தி ஊராட்சி ஒன்றியம் – நெடுங்கூர் ஊராட்சி, நெடுங்கூர் கிராம சர்வே எண் 100/B1 ல் 1.59.00 ஹெக்டேர் (3.93 ஏக்கர்) பரப்பளவில் அமையும் மனைப்பிரிவுக்கு அங்கீகாரம் வழங்கி உத்திரவிடல் – தொடர்பாக

பார்வை

1. அரசாணை (நிலை) எண் 71, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை நாள்: 16.06.2003
2. நெடுங்கூர் ஊராட்சி மன்ற தீர்மான எண்: 8/2022–2023 நாள்: 08.04.2022
3. நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர், கரூர் மாவட்டம். கடிதம் ந.க.எண் 682/2021 க.மா, நாள்: 08.03.2022
4. மனுதாரர் திரு.அகமது மைதீன் மற்றும் தங்கராஜ் எண் 10 G கொங்கு நகர் இனாம் கரூர் என்பவரது விண்ணப்பம் நாள்: 11.03.2021
5. சின்னதாராபுரம் சார்பதிவகம் 1 – புத்தகம் எண் 529 நாள்: 25-2-2022.

உத்தரவு

கரூர் மாவட்டம், புகளூர் வட்டம், க.பரமத்தி ஊராட்சி ஒன்றியம், நெடுங்கூர் ஊராட்சி, நெடுங்கூர் கிராமம் – சர்வே எண் 100/B1 ல் 1.59.00 ஹெக்டேர் (3.93 ஏக்கர்) பரப்பளவு கொண்ட இடத்தில் அமையும் மனைப்பிரிவுக்கு ஒப்புதல் கோரி பார்வை எண் 4 ல் காணும் விண்ணப்பத்தின்படி கரூர் மாவட்ட நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர் அவர்களுக்கு விண்ணப்பிக்கப்பட்டது. பார்வை 2 ல் காணும் விவரப்படி இம்மனைப்பிரிவினை அங்கீகரித்து நெடுங்கூர் ஊராட்சி மன்ற தீர்மான எண் 8/2022–2023 நாள்: 08.04.2022 ன்படி தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது.

பார்வை 3 ல் காணும் நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர் ந.க.எண் 682/2021 க.மா, நாள்: 08.03.2022 ஆம் தேதிய கடிதத்தின்படி மேற்படி இடத்தில் அமையும் வரைபடத்திற்கு உரிய நிபந்தனைகளுடன் மனைப்பிரிவு ம.வ/மா.ந.ஊ.அ(க.மா) எண்.30/2022 என எண்ணிடப்பட்டு இறுதி மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர் கடிதத்தில் தெரிவித்துள்ள நிபந்தனைகளை நிறைவேற்றும் விதமாக மனுதாரர் மனை அளவுகளை பிரித்தும், சாலைகள்அமைத்தும், சாக்கடைகள் கட்டியும் அடிப்படை வசதிகளை மேற்கொண்டுள்ளார். மேலும் நிபந்தனையின் அடிப்படையில் மொத்த மனைப்பிரிவில் சந்தை மதிப்பு தொகையில் ஏக்கர் 1.00 க்கு ரூ.2,01,000/– வழிகாட்டி மதிப்பின் அடிப்படையில் **1.59.00** ஹெக்டேர் (3.93 ஏக்கர்) மொத்த மதிப்பு ரூ.4,90,440/– மட்டும் 3% விழுக்காடு தொகை ரூ.23,700/– பல்வகை ரசீது எண் 025438 நாள் 29.04.2022 ன் படியும் மற்றும் கூராய்வு கட்டணமாக ரூ.4000/– பல்வகை ரசீது எண் 025439 நாள். 29.04.2022 ல் நெடுங்கூர் ஊராட்சிக்கு செலுத்தப்பட்டது. மேலும் ஊராட்சிக்கு ஒப்படைப்பு செய்ய வேண்டிய மனைப்பிரிவு, சாலை 58072.32 சதுர அடி (5395.05 சதுர மீட்டர்) பொது இடம் 575.00 சதுர அடி (53.42 சதுர மீட்டர்) மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கான இடம் 572.00 சதுர அடி (53.14 சதுர மீட்டர்) பூங்கா 11746.65 சதுர அடி (1091.30 சதுர மீட்டர்) ஆகியவற்றை பார்வை 5 ல் காணும் ஆவணம் மூலம் ஊராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.


இவற்றின் அடிப்படையிலும், கரூர் மாவட்ட நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர் அவர்களது இறுதி ஒப்புதல் அடிப்படையில், நிபந்தனைகள் ஏதேனும் விடுபட்டிருப்பின் அதனை நிறைவேற்ற வேண்டும் என்ற நிபந்தனைகளின் அடிப்படையில் நெடுங்கூர் ஊராட்சி, நெடுங்கூர் கிராமம் சர்வே எண் **100/B1** ல் **1.59.00** ஹெக்டேர் (3.93 ஏக்கர்) பரப்பளவு கொண்ட மனைப்பிரிவுக்கு ஒப்புதல் வழங்கி இதன்வழி உத்திரவிடப்பட்டுள்ளது.

N. Jegadeesan
தலைவர்
நெடுங்கூர் ஊராட்சி
நெடுங்கூர் ஊராட்சி

பெறுதல்
திரு.அகமது மைதீன் மற்றும் தங்கராஜ்
எண் 10 G கொங்கு நகர்,
இனாம் கரூர்,
கரூர் மாவட்டம். 639006.

நகல்

1. நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர், கரூர் மாவட்டம்.



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals


Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate